ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2132/7 - 2019 2019 ජූලි මස 17 වැනි බදාදා - 2019.07.17
*2132/7 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

**2019 ஆம் ஆண்டின் 130 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல : 4-3/11/2018/யூஏ/178.
பிரதேச செயலாளர் குறிப்பு இல. : பீஏ/எச்பீ/எல்என்ட2/எல்ஏகிவ்/01.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல. 1200/6, காணிச் செயலகம்,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, யூலை 08.

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், ஹப்புதலே.

2. **காணியின் விபரம்** : ஊவா மாகாணத்தில், பதுளை மாவட்டத்தில், ஹப்புதலே பிரதேச செயலாளர் பிரிவில், மஹபலாத கோறளே சிறு பிரிவில், ஹப்புதலே (63ஏ) கிராம அலுவலர் பிரிவில், ஹப்புதலே (ந.அ.ஆ.வ. 61) (ஹப்புதலே நகர சபை எல்லையில்) (பிரிவு இல. 01) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட 2019.02.28 ஆந் திகதிய மற்றும் பீ/ஏசீகிவ்/எச்பிரீ/2018/764 ஆம் இலக்க முதற் சுவட்டு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்வரும் பெயர்களையும் விஸ்தீரணங்களையும் கொண்ட பின்வரும் காணித் துண்டு :

01. **துண்டு ஏ - ஷெர்வுட் டிவிசன் - விஸ்தீரணம் : 0.0565 ஹெக்டயார்**

வடக்கு : வீதி (வீ.அ.அ.) மற்றும் சீமெந்து வடிகால் ; கிழக்கு : சீமெந்து வடிகால் மற்றும் ஷெர்வுட் டிவிசன் எனும் காணியின் எஞ்சிய பகுதி ; தெற்கு : ஷெர்வுட் டிவிசன் எனும் காணியின் எஞ்சிய பகுதி மற்றும் ராதா கிரிஷ்ணன் உரிமை கோரும் காணி ; மேற்கு : ராதா கிரிஷ்ணன் உரிமை கோரும் காணி மற்றும் வீதி (வீ.அ.அ.).

08 - 27

1A - G30523 - 26 (2019/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.